## தமிழ்நாடு வரைவாளர் சங்க மதுரைக்கிளை கட்டடம் வளர்ந்த நிகழ்வு

## கேள்விப்பட்ட விபரங்கள் (1982-க்கு முன்)

சுமார் 1970ம் ஆண்டில் வரைவாளர் சங்க முதல் மாநில மாநாடு மதுரையில் நடத்தப்பட்டு உள்ளது. அக்காலத்தில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை வரைவாளர்கள் இணைந்து ஒரே சங்கமாக இயங்கி வந்துள்ளது. அப்போது, மாநில தலைவராக நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த திரு.மு.து.சுப்ரமணியம் (MDS)அவர்கள் இருந்துள்ளார்கள்.

அச்சமயத்தில் மதுரைக் கிளையின் செயலாளராக திரு.இல.துரைராஜ் அவர்கள் மற்றும் பலரின் முயற்சியினால் அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் சிறப்பாக முதல் மாநில மாநாடு மதுரையில் Chamber of Commerce அரங்கத்தில் நடைபெற்றுள்ளது. அக்கால கட்டடத்தில் தான் மதுரைக்கிளை சங்க கட்டடம் கட்ட இடம் பெறப்பட்டுள்ளதாக தெரிகின்றது. அதன்பின் 1980-1981ஆம் வருடத்தில், மதுரை கிளையின் மாவட்ட தலைவராக இருந்த திரு.பா. காமாட்சி சுந்தரம், அவர்களாலும், மற்றும் உறுப்பினர்களின் கூட்டு முயற்சியால் ஏற்கனவே பெறப்பட்ட காலியிடத்தில் கட்டடம் A.C. சீட் கூரையுடன் கட்டப்பட்டு அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் 24.05.1981 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## 1982-க்குபின் நடந்த விபரங்கள்:

மதுரை கிளை சங்க கட்டடம் A.C. கூரை மாற்றி சிமெண்ட் (R.C.C.) கூரை அமைக்க வேண்டுமெனவும், கழிவறை அமைக்க வேண்டுமெனவும், மற்றும் அருகில் உள்ள காலி இடத்தில் சங்கத்தின் வெளியூர் உறுப்பினர்கள் தங்கி பணிமேற்கொள்ள ஏதுவாக மூன்று அறைகள் புதியதாக கட்ட வேண்டுமெனவும், முடிவு எடுக்கப்பட்டு, திருவாளர்கள். எஸ்.ஆர்.ஜெயராமன், மா.ஆறுமுகம், இல.துரைராஜ், என்.ஜெயச்சந்திரன், பெ.வெங்கடாசலம் மற்றும் உறுப்பினர்களால் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கண்ட கட்டடபணிகள் மேற்கொள்வதற்கு பல்வேறு நபர்களிடம் நன்கொடையாக வசூல் செய்தும், திரை அரங்குகளில் முதல் சினிமா காட்சியின் அனைத்து இருக்கைகளையும் நமது சங்கம் பணம் கொடுத்து பெற்று அதனை கூடுதல் விலைக்கு அனுமதி சீட்டு அச்சடித்து சங்க உறுப்பினர்கள் மூலமாக பல்வேறு நபர்களிடம் விற்கப்பட்டது. அதில் கிடைத்த லாபம் கட்டட பணிக்காக பயன்படுத்தப்பட்டது.

மேலும், "தங்க நாணய பரிசுத்திட்டம்" போன்று பல்வேறு முறைகளில் நிதி வசூல் செய்து கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

கட்டடம் கட்டப்படும் காலத்தில் சங்க மாநில தலைவராக திரு. எல்.ஆர்.ஜி. என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. எல்.ஆர்.கோபாலகிருஷ்ணன் அவர்கள் நமது சங்கத்தினை வெகுவாக முன்னேற்றியமைக்கு நன்றி கூறும் முகமாக அவரது பெயரில் "எல்.ஆர்.ஜி அரங்கம்" என்று கூட்ட அரங்கிற்கு பெயர் சூட்டப்பட்டு அன்றைய மாநிலத்தலைவர் திரு. கே.கே.எம். தாமோதரன், அவரது தலைமையில் திரு. எல்.ஆர்.ஜி. அவர்களால் 10.09.1988 அன்று திறக்கப்பட்டு, திறப்பு விழா மூன்று தினங்கள் வெகுவிமர்சையாக சிறப்பாக நடைபெற்றது.

அதன் பின்னர், புதியதாக கட்டப்பட்ட மூன்று அறைகள் மேல் முதல் மாடி கட்டடம், அப்போது கட்டட காப்பாளராக பொறுப்பில் இருந்த திரு. கே.கே. கோபாலகிருஷ்ணன் நாயர் அவர்கள் முயற்சியாலும், மூத்த உறுப்பினர்களான திருவாளர்கள் என்.மோகனசுந்தரம், A.மந்தைச்சாமி V.கிருஷ்ணசாமி, P.பத்மநாபன் மற்றும் ஏஸ்.சந்திரசேகர் ஆகியோரின் பிரதான ஒத்துழைப்பினாலும், நமது சங்கத்தின் பெருமுயற்சியாலும், திரு.என்.சேதுராமசாமி, திரு.ஜீ.கே.சண்முகம், திரு. எம்.வடிவேலு, ஆகிய மூத்த தலைவர்களின் கடின உழைப்பினாலும், வரைவாளர்களிலிருந்து பொறியாளர்களாக பதவிமாற்றம் பெற்று சென்றவர்களின் மூலம் கட்டுமான பொருட்கள் பெற்றும் முதல் மாடி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 2003ம் வருடம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு நன்முறையில் அனைவராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**"சங்கத்தை வளர்த்தால் தான் நாமும் வளர்வோம்."**

**"எனவே நம்பிக்கையுடன் சங்கத்தை வளருங்கள் நாமும் உயர்வோம்"**

**நன்றி**

**வணக்கம்**

04.01.2023
**சு.பிச்சைமுருகன்,**
**முன்னாள் இளநிலை வரைதொழில் அலுவலர்,**
**சங்க ஆயுள் உறுப்பினர் எண்: 512**
**செயற்பொறியாளர் (ஓய்வு)**, பொ.ப.து.